# விவேக அரும்பு



## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
## வெற்றியாளர் பாராட்டு விழா மலர்
## 2022




**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**ஆரம்பப் பிரிவு**
**திருகோணமலை**

# விவேக அரும்பு

## 2022 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## வெற்றியாளர்கள்

## பாராட்டு விழா மலர்



**தி /உவர்மலை விவேகானந்தா கல்லூரி**

**(தேசிய பாடசாலை)**

**ஆரம்பப் பிரிவு**

**திருகோணமலை**

***மகுட வாசகம்***

*கல்வி, ஒழுக்கம், தூய்மை*

## Motto

Education, Discipline, Purity

**நோக்கு**

*அறிவு மிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரஜைகள்*

## Vision

Competent citizens who cope with the erudite world

***பணி***

*களத்தில் நடப்பது கடந்தகால நிகழ்கால அனுபவங்களுடன் வருங்காலத்தின் சவால்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட கற்றற் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும், திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்*

## Mission

To create knowledge, skillful, disciplined and honest students by providing ameliorated learning opportunities through an analysis of the experiences of the past and present and the challenges of the future.

# பாடசாலைக் கீதம்

*உவர்மலைக் கல்லூரி விவேகானந்தா வாழ்க*
*ஊதா வெள்ளை கொடி நிமிர்ந்தாட*
*உவர்மலை மக்கள் உவந்தளித்தனராம்*
*உயரிய செயலால் உளம் நிறைந்தனராம் !*

*ஒளியருள் கோணேசர் மலைமுடியில் - எங்கள்*
*எழில் தவழ் உவர்மலை கலை வடிவில்*
*கிளி மொழி தமிழ் எங்கும் வழிந்தோட -அதன்*
*கிருபையில் நாட்களும் கழிந்தோட !*

*கங்கா ஜமுனா காவேரி சிந்து*
*கற்பவரிடையே படை நான்கும்*
*எங்கள் திறமைகள் துலங்கிடுமே - அதன்*
*இனிமையில் பணிகளைத் தொடங்குவோமே !*

*உலகின் சிகரம் கல்வியென்போம் - அதன்*
*உண்மையை உணர்வோம் உயர்வடைவோம்*
*கலைகள் பலவும் வளர்த்திடுவோம் - என்றும்*
*கற்றதை மற்றவர்க் குணர்த்திடுவோம் !*

# பாடசாலை விபரம் - 2022

| | | |
|---|---|---|
| ✦ பாடசாலையில் பெயர் | : | தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி [தேசிய பாடசாலை ] |
| ✦ முகவரி | : | உவர்மலை ,<br>திருகோணமலை |
| ✦ பாடசாலையின் தரம் | : | 1AB |
| ✦ பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | : | 1978.02.10 |
| ✦ பாடசாலையின் ID இலக்கம் | : | 1701008 |
| ✦ பரீட்சை இலக்கம் | : | 29124 |
| ✦ பாடசாலை தொகை மதிப்பு இலக்கம் | : | 16058 |
| ✦ மாகாணம் | : | கிழக்கு |
| ✦ மாவட்டம் | : | திருகோணமலை |
| ✦ வலயம் | : | திருகோணமலை |
| ✦ கல்வி அலுவலகப் பிரிவு | : | திருகோணமலை |
| ✦ பிரதேச செயலாளர் பிரிவு | : | பட்டினமும் சூழலும் |
| ✦ தபால் இலக்கம் | : | 31000 |
| ✦ தேர்தல் இலக்கம் | : | 14 |
| ✦ கிராம உத்தியோகத்தர் பிரிவு இலக்கம் | : | 244/P |
| ✦ பாடசாலை தொலைபேசி இலக்கம் | : | 026-2222761 |
| ✦ பாடசாலை மின்னஞ்சல் முகவரி | : | t.o.vivekananda@gmail.com |

# மலர்க்குழு

ஆலோசனை :

திரு. க. ரவிதாஸ்
அதிபர்

திரு. ம. பிரகாஸ்
பிரதி அதிபர்

திருமதி. த. விஸ்ணுகுமார்
உதவி அதிபர் - ஆரம்பப் பிரிவு

திருமதி. செ. ஆனந்தராஜன்
பகுதித் தலைவர்

பொறுப்பாசிரியர்கள் :
திருமதி. வ. ஸ்ரீகாந்தன்
திருமதி. த. விக்னேஸ்

மாணவர்கள் குழு :
செல்வன். ஸ்ரீ. கோசிகன்
செல்வன். ஞா. ரிசாந்
செல்வன் யோ. லிகேஸ்னன்
செல்வி . வி. விஹன்யா

# *கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி*



தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் ஆரம்பப்பிரிவினால் இரண்டாவது இதழாக வெளிவரும் ''**விவேக அரும்பு**'' சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கு இணங்க ஆரம்பக் கல்விப் பிரிவானது விளையாட்டுடன் கூடிய கல்வியை மட்டுமல்லாது பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்த்தெடுப்பதில் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது.

எழுத்தாற்றல், வாசிப்புப் பழக்கம் என்பவற்றை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் கல்லூரியின் நிகழ்கால விடயங்கள், சாதனைகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பவற்றை எதிர்கால சந்ததிக்கு எடுத்துச் செல்லும் சிறந்த ஆவணமாக இது அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

இதற்கான ஆக்கங்கள் வழங்கிய மாணவர்கள் ஊக்குவித்த ஆசிரியர்கள், வழிநடாத்திய ஆரம்பப்பிரிவு உதவி அதிபர் திரு. T. விஸ்ணுகுமார் மற்றும் சஞ்சிகை வெளியிடுவதில் ஆர்வம் காட்டிய முன்னாள் ஆரம்பப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்த பிரதி அதிபர் திரு. M. பிரகாஷ் ஆகியோருக்கும் இன்று பாராட்டுப் பெற இருக்கும் மாணவர்களுக்கும், நிகழ்வை முன்னின்று நடாத்துகின்ற பெற்றோர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

இச்சஞ்சிகை தொடர்ந்து வரும் ஒவ்வொரு வருடங்களிலும் புதிய இதழ்களாக வெளிவர வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் நிகழ்வு சிறப்பாக அமைய எனது மேலான ஆசிகளை வழங்குகின்றேன்.

நன்றி

*திரு K.ரவிதாஸ்*

**அதிபர்**

*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



"எவனுடைய உள்ளத்தில் விவேக விளக்கு ஏற்றிவைக்கப்படவில்லையோ அவன் அறிவுத்துறை யில் வறியவனாகின்றான்" எனும் சிந்தனைக்கு அமைய மனிதனின் உள்ளார்ந்த உணர்வினை அடங்கி அமிழ்ந்து கிடக்கின்ற விவேக உணர்வினை தட்டி எழுப்பி எதிர் கால சந்ததியினரின் செயல்களை விவேகம் மிக்கதாக ஆக்கி அறிவார்ந்த சமூகத்தை கட்டி எழுப்ப "விவேக அரும்பு" எனும் நூல் பிரசவிப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு பொறுதியில் அமிழ்த்தப்பட்டுள்ள கம்பிச் சுருள் பொறுதி இழுக்கப்பட்டதும் பாய்ந்து தன் சக்தியை வெளிப்படுத்த எவ்வாறு துடிக்கின்றனவோ அதுபோலவே இந்நூல் வெளிவந்து அதிர்வலையை ஏற்படுத்தி மனித உள்ளங்களை சிந்திக்கத் தூண்டுவனவாய் அமையும்.

விவேக அரும்பு நூலானது சென்ற வருடம் முதலாவது புத்தகமாக புலமைப்பரிசில் பரீட்சை சாதனையாளர்களை மட்டும் தாங்கியதாக வெளிவந்தது. இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சை சாதனையாளர்களுடன் ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களையும் தாங்கி ஆரம்பப் பிரிவுக்குரிய ஒரு முழுமையான ஆவண நூலாக விவேக அரும்பு – 02 வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தொடர்ந்து இக்கல்லூரியில் சாதனையாளர்களை உருவாக்குவதில் இந்நூல் அடித்தளமாய் அமையும் என்பதில் அசையா நம்பிக்கை உண்டு. எனவே கல்லூரித்தாயில் இருந்து பிறக்கும் இந்நூல் சிறப்புற வெளிவருவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு நூல் சிறப்பாக வெளிவருவதற்கு அர்ப்பணிப்புடன் உழைத்த அனைவருக்கும் எனது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

***திரு ம.பிரகாஸ்***

**பிரதி அதிபர்**

*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*

# உதவி அதிபரின் வாழ்த்துச் செய்தி



எழில் கொஞ்சும் திருகோணமலையில் உவர்மலை கண்ணகி அம்மனின் அருளுடன் தலைநிமிர்ந்து நிற்கும் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் ஆரம்பப் பிரிவு சிறார்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் வெற்றியாளர் பாராட்டு விழா மலரான **"விவேக அரும்பு"** சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

திருமலையில் உள்ள சிறந்த முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் இக் கல்லூரியின் உயர்ச்சிக்கு அதிபர் திரு.க.ரவிதாஸ் ஐயா அவர்களின் இடையறாத முயற்சியும் அர்பணிப்புடனான சேவையுமே காரணமாகும். மேலும் இதுவரை காலமும் ஆரம்பப் பிரிவிற்குப் பொறுப்பாக இருந்து வழிநடாத்திய பிரதி அதிபர் திரு.ம.பிரகாஸ் அவர்களின் அயராத உழைப்பின் காரணமாக இவ் வருடமும் தொடர்ச்சியான வளர்ச்சியின் வெளிப்பாடாக இம்மலர் வெளிவருவது மற்றுமொறு சிறப்பம்சமாகும்.

ஆசிரியர்களதும் மாணவர்களதும் இலைமறைகாயாக இருந்த பல்வேறு ஆக்கங்கள் இச் சஞ்சிகையின் மூலம் வெளிப்பட்டு நிற்பது பெருமைக்குரிய விடயமாகும். எனவே, எதிர்வரும் காலங்களிலும் அரும்புகளின் பல்வேறு ஆக்ககங்களையும் சாதனைகளையும் தன்னகத்தே கொண்டு இம்மலரானது வெளிவரவேண்டுமென வாழ்த்துவதுடன் இச் சஞ்சிகை வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

*திருமதி T.விஸ்ணுகுமார் **(SlPS)***
*உதவி அதிபர்*
*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*

# பொருளடக்கம்


| *எண்* | *உள்ளே* | *பக்கம்* |
|---|---|---|
| 1. | உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் ஆரம்ப வரலாறு | 1 |
| 2. | வகுப்பறையும் ஆசிரியரும் | 3 |
| 3. | வாழத்துடிக்கும் பிள்ளைக்காய் பெற்றார் செய்ய வேண்டியவை. | 7 |
| 4. | மௌனவாசிப்பும் ஆரம்பப் பிரிவும் | 9 |
| 5. | உணவு சாப்பிடும் முறை | 11 |
| 6. | உலகப் பொதுமறையாம் திருக்குறள் | 12 |
| 7. | எனது ஆசிரியர் | 13 |
| 8. | சுவாமி விபுலானந்தர் | 14 |
| 9. | நான் பறவையானால் | 14 |
| 10. | பனைமரம் பேசுகிறேன் | 15 |
| 11. | காவலர் | 16 |
| 12. | கல்விக்கவிதை | 17 |
| 13. | அம்மா | 17 |
| 14. | மதிப்பெண் | 18 |
| 15. | ஆசான் | 18 |
| 16. | மழை | 19 |
| 17. | என் தாயே | 19 |
| 18. | இயற்கை | 20 |
| 19. | என் ஆசான் | 20 |
| 20. | 2022 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வெற்றியாளர்களின் புகைப்படம் | |
| 21. | தரம் 5 மாணவர்களின் புகைப்படம் | |
| 22. | ஆரம்பப் பிரிவு நிகழ்வுகளின் புகைப்படம் | |
| 23. | கல்வி | 21 |
| 24. | நல்ல பழக்கவழக்கங்கள் (பாடல்) | 22 |
| 25. | My Beautiful garden | 23 |
| 26. | My School | 24 |

| | | |
|---|---|---|
| 27. | My Pet (cow) | 24 |
| 28. | My Self | 25 |
| 29. | மரங்களை வெட்டாதீர்கள் (சித்திரம்) | 26 |
| 30. | எனது கிராமம் (சித்திரம்) | 27 |
| 31. | ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் விபரங்கள் | 28 |
| 32. | 2023 ஆரம்பப் பிரிவுக்கான நாட்காட்டி | 29 |
| 33. | ஆரம்பப் பிரிவின் செயற்பாடுகள் - 2022 | 32 |
| 34. | ஆரம்பப் பிரிவு வகுப்புரீதியான சஞ்சிகை ஆக்கப்போட்டி | 33 |
| 35. | 2022 வலய மட்டப் போட்டிகளின் வெற்றியாளர்கள் | 34 |
| 36. | ஆரம்பப் பிரிவு அமைப்புக்களும் பொறுப்பாசிரியர்களும் | 34 |
| 37. | மாணவ தலைவர்கள் பெயர்விபரம் | 35 |
| 38. | குருளைச்சாரணர் படையணி பெயர்விபரம் | 36 |
| 39. | புனித ஜோவான் கிற்றிப் படையணி பெயர்விபரம் | 37 |
| 40. | சிங்கிதி மாணவர்கள் பெயர் விபரம் | 38 |
| 41. | பாண்ட் வாத்தியக்குழுவினர் பெயர் விபரம் | 39 |
| 42. | சுற்றாடல் கழக படையணி பெயர் விபரம் | 40 |
| 43. | 2022 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் விபரம் | 41 |
| 44. | 2022 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 142 வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விபரம் | 45 |
| 45. | 1984 - 2022 வரையான காலப்பகுதியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலையில் உச்ச புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம் | 46 |
| *46.* | தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 1994 தொடக்கம் 2022 வரையான பெறுபேற்றுப் பகுப்பாய்வு | 48 |
| 47. | தெரிந்து கொள்ளவேண்டிய தினங்கள் (பொது அறிவு) | 49 |
| 48. | நன்றி நவிலல் | 50 |

# உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் ஆரம்ப வரலாறு

திருகோணமலை நகரின் எழில்மிகு பிரதேசம் உவர்மலை ஆகும். இவ் உவர்மலைப் பிரதேசமானது மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலப்பகுதியாகும். இந் நிலப்பகுதியில் வீற்றிருக்கும் கண்ணகி அம்மன் ஆலயத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும் கலைக்கூடமே எமது உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி ஆகும். இன்று திருகோணமலை மாவட்டத்தின் பிரபல்யமான பாடசலைகளில் ஒன்றாக இக்கல்லூரி திகழ்கின்றமைக்கு கண்ணகித் தாயின் அருள் என்றால் அது மிகையாகா.

இப்பாடசாலையின் ஆரம்ப வரலாற்றை நோக்குகையில், உவர்மலை மக்களால் தங்களது பிள்ளைகளுக்கு தமது கிராமத்தில் ஒரு கல்விக்கூடம் தேவை என்பதனைக் கருத்திற் கொண்டு அம்மக்களால் பணம் திரட்டப்பட்டு அப்பணத்தில் 1977ஆம் ஆண்டு நடுப்பகுதியில் 25 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட ஓலையால் வேயப்பட்ட ஒரு கொட்டில் அமைக்கப்பட்டது. கதிரை, மேசை பயன்படுத்தப்படவில்லை. நிலத்தில் மாணவர்கள் இருப்பதற்கு ஏற்றவாறு நிலம் இழுக்கப்பட்டது. 1 தொடக்கம் 4 ஆம் ஆண்டுவரை வகுப்புக்கள் அமைக்கப்பட்டு திரு.ஏ.தங்கவேல் ஐயா அவர்களை அதிபராகக் கொண்டு உவர்மலையில் வசித்து வந்த திருமதி. ஆர்.ராஜமன்னார், திருமதி. ஏ.ஆரோக்கியநாதன், திருமதி. ஏ. கிருபைநாயகி போன்ற மூன்று ஆசிரியர்களுடனும் 108மாணவர்களுடனும் இப் பாடசாலை 1978ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 10ம் நாள் தி/உவர்மலை தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இக் காலகட்டத்தில் நிழல்தரும் வேப்பமரங்கள் இருந்தன. அதன் கீழே படங்கு விரித்து மாணவர்களுக்கு கற்பித்தல் இடம்பெற்றது.

உவர்மலை மக்கள் உவர்மலை அபிவிருத்திசபை என்னும் ஓர் சபையை உருவாக்கி அதன் மூலம் இப்பாடசாலையை அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருதற்காக 1979ம் ஆண்டு திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. இரா.சம்பந்தர் அவர்களிடம் கையளித்தனர். அதன்பின் அரசாங்கம் இப்பாடசாலை யைப் பொறுப்பேற்று கதிரை, மேசைகளை வழங்கியது. ஆங்கில ஆசிரியராக திரு.ஜேம்ஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டாலும் உவர்மலை மக்களிடம் எமது பாடசாலை எமது பிள்ளைகள் என்ற எண்ணம் என்றும் ஓய்ந்ததில்லை. மழை என்றால் மண்வெட்டியுடன் பாடசாலையில் நின்று கொட்டிலுக்குள் நீர் சென்றுவிடாமல் வெட்டிவிடும் பெரியவர்கள் இன்று இல்லை என்பது மனவருத்தத்திற்குரியது. அதுமட்டுமின்றி தங்களது தொழில் முடிந்ததும் மண்வெட்டியுடன் வந்து மலையை

வெட்டி உடைத்து அடுத்த கொட்டிலுக்கு ஆயத்தப்படுத்தும் காட்சி என்றும் எம் மனதில் உள்ளது. அவர்களின் ஆரம்ப முயற்சியே இப்பாடசாலையின் இன்றைய வளர்ச்சிக்கு மூல காரணமாக அமைகின்றது. இப்பாடசாலை அமைந்துள்ள காணியின் அளவு 3.62 ஏக்கராகக் காணப்படுகின்றது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரா.சம்பந்தரின் உதவியுடனும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கள், சங்க உறுப்பினர்கள் போன்றோரின் அயராத முயற்சியினாலும் பல கட்டடங்கள் உடனடியாக அமைக்கப்பட்டன.

இன்று இக் கல்லூரியானது (45 வருடங்களில்) குறுகிய காலத்தில் அபார வளரச்சியையும், சுமார் 1800ற்கு மேற்பட்ட மாணவர்களையும், கல்வியில் மிகச் சிறந்த பெறுபேறுகளையும், மாவட்ட ரீதியில் முதல் இடங்களையும் பெறுகின்றது. இதனை விட இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முதல் இடங்களைப் பெறுகின்றது என்றால் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இக் கலைக்கூடத்தை ஆட்சிபுரியும் அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கள் உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், உவர்மலை வாழ் மக்கள் போன்றோரின் சிறந்ததொரு அயராத உழைப்பு என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதை கூறிக்கொள்கின்றேன்.

நன்றி

*திருமதி. செல்வநளினி சுரேஸ்குமரன்*

*ஆரம்பக் கல்வி ஆசிரியர்*

*பழைய மாணவி*

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

***அடிமைகளின் குணமாகிய***
***பொறாமையை முதலில் அழித்துவிடு***

*- சுவாமி விவேகானந்தர் -*

# வகுப்பறையும் ஆசிரியரும்

இருபத்தோராம் நூற்றாண்டில் பாடசாலை முறைமை பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது. அதில் பிரதானமான ஓர் மாற்றத்துக்கு உட்படுகின்ற இடம் வகுப்பறையாகும். பாடசாலைகள் ஒவ்வொன்றும் வெற்றியடைய வேண்டுமாயின் வகுப்பறைகள் அனைத்தும் உயிரோட்டம் உள்ளவையாக இருக்கவேண்டும். வகுப்பறைகளின் உயிரோட்டத்துக்கு ஆசிரியர்களின் செயற்பாடுகளின் வினைத்திறனும், மாணவர்களின் சிறப்பான இயங்குதன்மையும் முக்கியமாகும்.

வகுப்பறை முகாமைத்துவம் என்பது கற்றலுக்கான உதவிச் செய்முறை என்ற வகையில் வகுப்பறையை ஒழுங்கு செய்வதும் கற்றலுக்கான அணுகுமுறையை ஒழுங்கு செய்வதுமான ஒரு வழிமுறையாகும் எனவும் இதன்மூலம் பிள்ளைகளிடம் விரும்பத்தகுந்த அறிவுசார் விளக்கம் ஏற்படும் வகையில் ஆசிரியர்கள் சிறந்த நிர்வாகத்தினூடாக தமது பணிகளை செய்யவும் தமது கற்பித்தலை முன்வைக்கவும் முடியும் எனவும் இதன்படி வகுப்பறை முகாமைத்துவம் என்பது கற்றலுக்கு சாதகமான ஒரு நிலையை உருவாக்கும் நோக்குடைய செயற்பாடு என்பது தெளிவாகின்றது என போறன் என்னும் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். வகுப்பறை முகாமைத்துவ செயற்பாட்டில் வகுப்பறை முகாமைத்துவத்தை விளங்கிக் கொள்ளுதல், வினைத்திறனான வகுப்பறை முகாமைத்துவ நுட்பங்களை கடைப்பிடித்தல், வகுப்பறை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல், விதிமுறைகளை அறிமுகம் செய்தல், மாணவர்களின் பொறுப்புகளும் கடமைகளும், வகுப்பறை முகாமைத்துவ துணுக்குகளை பின்பற்றுதல் என்பன பிரதானமானவையாகும். இவற்றுக்கு புறம்பாக வகுப்பறையை ஒழுங்குபடுத்தல், அமைதியை நிலைநாட்டுதல், நேர முகாமைத்துவம், வகுப்பறை அமைப்பு, வீட்டுவேலை நடைமுறை, புள்ளியிடல் முறைகள், மாணவர்களது பின்னூட்டல்களுக்கான முன்னுரிமை, மாணவர் தெரிவு என்பனவும் வகுப்பறை முகாமைத்துவத்தில் முக்கியமானது.

சிறந்த வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளாக ஆசிரியர்களும் சில கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. நேரம் தவறாமை, நன்கு ஆயத்தமுடையவராக இருத்தல், விரைவாக வேலையில் ஈடுபட ஆயத்தமாதல், குரல் வளத்தை சிறப்பாக பயன்படுத்தல், வகுப்பில் என்ன நடைபெறுகின்றது என்பதில் உன்னிப்பாக இருத்தல், வகுப்பில் என்ன நடைபெறுகின்றது என்பதை பகுப்பாய்வு செய்தல், நெருக்கடி நிலைமைகளின் போது சிறந்த உபாயமுறை களை கையாள்பவராக இருத்தல், ஒப்பீடு செய்வதைத்தவிர்த்தல், நிச்சயமான வாக்குறுதிகளை மட்டும் வழங்குதல், வழமையான வகுப்பறைப்பணிகளை மாணவர்களுக்கு பகிர்ந்தளித்தல், வகுப்பறையை சிறந்த முறையில் ஒழுங்கு செய்தல், மாணவர்களுடைய பிரச்சினைகளைக் கவனித்தல் என ஆசிரியர்களின் வகுப்பறைக் கடமைகள் நீண்டு கொண்டே செல்கின்றது. இவற்றை ஆசிரியர்களின் முகாமைத்துவ செயற்பாடுகள் எனவும் குறிப்பிடலாம்.

உளவியலாளர்களின் கருத்துப்படி எல்லா நடத்தைகளும் அவற்றிற்கு முன்பு இடம்பெறும் நிகழ்ச்சிகள், நிபந்தனைகள் என்பவற்றிலும் அந்நடத்தையை தொடர்ந்து வரும் விளைவுகளினாலும் ஏற்படுத்தப்படுகின்றன என குறிப்பிடுகின்றனர். எனவே நடத்தையொன்றிற்கான முன் நிகழ்வுகள் மாணவர்களை பொருத்தமான அல்லது ஒழுங்கீனமான நடத்தைக்கு இட்டுச் செல்லலாம். இதற்கென ஆசிரியர்கள் வருட ஆரம்பித்திலேயே நவீனமயமான கற்றல் செயற்பாடுகளை வகுப்பறையில் ஒழுங்கமைப்பது அவசியமாகும்.

வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளில் கட்டுப்படுத்தப்பட வேண்டிய முக்கியமான மாறியாக இருப்பது வகுப்பறையின் பௌதிக சூழலாகும். வகுப்பறையில் நாளுக்கு நாள் பிரச்சினைகள் எதிர்கொள்ளப்பட்டாலும் பௌதிகச் சூழலை ஒழுங்குபடுத்த மிகக் குறைந்த கவனமே கொடுக்கப்படுகிறது. இச்சூழல் கற்றல் செயற்பாட்டினை பாதிக்கும் என்பதை ஆசிரியர்கள் மனதிற் கொள்ள வேண்டும். ஒரு வகுப்பறையின் பௌதிகச் சூழல் இடவசதி, தளபாடம், காற்றோட்டம், வெளிச்சம் மற்றும் கற்பித்தல் சாதனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். ஆசிரியர் இவற்றை கற்பித்தலுக்கு பொருத்தமானதாக ஒழுங்கமைக்கவும் பயன்படுத்தவும் அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் வகுப்பறை மட்டத்தில் பணியாற்றும் நிலையில் தனிப்பட்ட முறையில் அவர்களைப் பாதிக்கும் அம்சங்களில் முதன்மையானவற்றுள் நேரம் போதாமை என்பது முக்கியமானது. நேரம் போதாமை என்ற காரணம் அவர்களது தாமதமான பணிகள், செயல்களில் இருந்து ஒதுங்குதல், வினைத்திறனற்றுச் செயலாற்றுதல், வகை கூறலுக்கு இணங்காமை போன்ற பலவற்றுக்குரிய நியாயப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது ஒரு வகையில் தொழில் சார்ந்த பலவீனமாகவே இனங்காணப்படுகின்றது. ஆசிரியரின் வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளில் நேரம் அடிப்படையானது. நேரத்தை அடிப்படையாகக் கொண்டே ஏனைய முகாமைத்துவ செயற்பாடுகள் திட்டமிடப்படுகின்றன. நேரத்தை திட்டமிடுவதில் தவறு ஏற்படுமிடத்து வகுப்பறைச் செயற்பாடுகளில் தொடராக தவறுகள் ஏற்பட்டு விடுவதைக் காணலாம்.

நேரத்தைத் திட்டமிடத் தவறுவதால் உடல் ரீதியான பாதிப்புகளும், உளரீதியான பாதிப்புகளும் ஏற்படுவதுடன் தனிப்பட்ட வகையில் பரபரப்பு, பதகளிப்பு, மன அழுத்தம், கோபம் கொள்ளல், விரக்தி அடைதல் போன்ற பல நலக்கேடான நடத்தைக் கோலங்கள் அல்லது மனவெழுச்சிகளை ஏற்படுத்திவிடுகின்றது. நேரம் ஒரு வளமாகும். தனிப்பட்ட தேவைகள், குடும்ப தேவைகள், பாடசாலை மட்ட தேவைகள், சமூகமட்ட தேவைகள் என்பவற்றை நிறைவேற்ற நேரம் உதவுகின்றது. நேரம் தொடர்பாக ஆசிரியர்கள் நேரத்தை உருவாக்குதல், நேர முகாமைத்துவம், நேரத்தை திட்டமிடல், நேரப்பயன்பாடு பற்றிய மதிப்பீடு என்பவற்றை பரிசீலித்தல் வேண்டும்.

பாடசாலையினால் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் எதிர்காலத்தில் அடையப்படுவதற்கான அடிப்படை உண்மையான செயற்பாட்டு அலகு வகுப்பறை ஆகும். கற்றல் - கற்பித்தல் பணிகளின் வெற்றியும், மாணவர்களின் நடத்தைகளும், தொழில்நுட்ப மற்றும் சாதனங்களையும் கொண்ட அமைப்பும் உள்ளகச்சூழல் அல்லது கவின் நிலையை உண்டாக்குதலில் பெரிதும் தங்கியுள்ளது. அவை மாணவர் ஆற்றலுக்கும், தேவைக்கும் உறுதுணையாக இருக்கும். கற்றல் - கற்பித்தல் முயற்சி மற்றும் முகாமைத்துவப்பாங்கு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சூழலாக இருப்பதன் காரணமாக கவின்நிலை மிகவும் முக்கியமானதொன்றாக உள்ளது. எனவே வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்களின் முக்கியமானதொரு எதிர்பார்ப்பு சிறப்பான வகுப்பறைக் கவின் நிலையாகும். மற்றைய வகுப்பறைக் காரணிகளை விட இது ஆசிரியர்களின் கற்பித்தலில் கூடிய பங்களிப்பைச் செய்வதினால் இதுவும் சிறப்பாக அமைவதையே ஆசிரியர் எதிர்பார்ப்பர்.

ஒரு வகுப்பறையின் கவின்நிலை நான்கு பிரதான அம்சங்களை உடையது. வகுப்பறையின் முகாமையாளர் ஆசிரியர் என்ற வகையில் அவற்றை நன்றாக விளங்கிக் கொள்வதன் மூலம் பயன்தரு தன்மை கொண்ட சிறப்பான நிர்வாகத்தின் மூலம் வினைத்திறனான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை ஏற்படுத்த முடியும். இந்த நான்கு பிரதான அம்சங்களாக மானுடக் கவின்நிலை, கல்விசார் கவின்நிலை, சகபாடிகள் கவின்நிலை, நிருவாகக் கவின்நிலை ஆகியன காணப்படுகின்றன.

வகுப்பறையின் கவின்நிலையில் மானிடக் கவின் நிலை மிகவும் முக்கியமானதொன்றாகும். இது வகுப்பறைக்குள் நிகழ்கின்ற மனிதச் சூழலை அல்லது மானிடப்பணியைக் கருதுகின்றது. கொடுக்கப்பட்ட நேரத்தில் இம்மானிடக் கவின்நிலையானது சாதகமாக, நடுநிலையானதாக அல்லது சாதகமற்றதாக இருக்கலாம். ஒரு பயன்தரு வகுப்பறை நிர்வாகி மானிடக்கவின் நிலையின் பல்வேறு அம்சங்களை விளங்கிக்கொள்ள அல்லது கட்டுப்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும். எனவே மானிடக் கவின் நிலையானது எப்பொழுதும் மனிதத் தொடர்புகளை அங்கத்தவர்களுக்கிடையில் முன்னேற்றவும் அவர்களுடைய மனப்பாங்குகள் வகுப்பறை, பாடசாலை ஆகியவற்றை நோக்கி வளரவும் உதவும். பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் பொதுவாக உயிரோட்டம் உள்ளவையாக காணப்படுகின்றன. இங்கே ஆசிரியர்கள் பெரும்பாலும் செயற்பாட்டுடனான கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். மாணவர்கள் ஆர்வத்துடன் ஆசிரியர்களுடன் இணைந்து குழுக்களாக வேலைகளில் ஈடுபடுகின்றனர். பெற்றோர்கள் மாணவர்களுக்குத் தேவையானவற்றை எப்போதும் தயார்படுத்திக் கொடுக்கின்றனர். இவ்வாறானவற்றின் மூலம் ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் உயிரோட்டம் உள்ளவையாக இருக்கின்றன. எவ்வாறெனினும் வகுப்பறைகள் ஒவ்வொன்றினதும் வெற்றி ஆசிரியர்களில்தான் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களது தொழில் வாண்மையினை இற்றைப்படுத்திக் கொள்வதுடன் தொழில்நுட்ப அறிவினையும் மேம்படுத்திக் கொண்டு இருபத்தோராம்

நூற்றாண்டுக்கான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் வகுப்பறைகளில் மாற்றுப் பெற்றோர்களாகச் செயற்பட வேண்டும். வகுப்பறைகளையும் ஆசிரியர்களையும் எப்போதும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. வகுப்பறைகள் ஒவ்வொன்றினதும் அதிபர் ஆசிரியர்களேயாவர்.

*"உன் திறமையை வெளிக்காட்டு உலகம் உன்னைக் கண்டறியும்"*

**திரு. ம. பிரகாஷ்** (SLPS)
B.B.A, P.G.D.E, P.G.D.E.M, MEd.®
**பிரதி அதிபர்,**
*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*

***பகை, பொறாமை ஆகியவற்றை நீ***
***வெளியிட்டால்,***
***அவை வட்டியும் முதலுமாக மீண்டும்***
***உன்னிடமே***
***திரும்பி வந்து சேர்ந்துவிடும்***
- சுவாமி விவேகானந்தர் -

# வாழத் துடிக்கும் பிள்ளைக்காய் பெற்றார் செய்ய வேண்டியவை

அன்பான பெற்றார்களே!

உங்கள் பிள்ளைகள் நல்லவர்களாக வாழ வேண்டும் என்று நினைக்கின்றீர்களா?

1. பாசத்துடன் நடந்து கொள்ளுங்கள்.
2. அளவோடு கண்டித்திடுங்கள்.
3. அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுக்காதீர்கள்.
4. தவறுகள் செய்யும் வேளையில் சுட்டிக்காட்டுங்கள்.
5. பிழை செய்தால் மன்னித்து திருந்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
6. சாதிக்கும் வேளை பிள்ளையை பாராட்டுங்கள்.
7. பிள்ளையின் உடல், உள தேவைகளை அறிந்து கொள்ளுங்கள்.
8. முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாய் இருங்கள்.
9. வழிகாட்டியாக இருங்கள்.
10. பிள்ளைகளுக்கு நல்ல நண்பராக இருங்கள்.
11. பிள்ளைகளுக்காக சற்று நேரத்தை ஒதுக்குங்கள்.
12. வீட்டில் கற்றலுக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுங்கள்.
13. பிள்ளைகள் விளையாடுவதற்காக சற்று நேரத்தை ஒதுக்குங்கள்.
14. பிள்ளைகளுக்கு நல்ல ஒழுக்க பண்புகள் நிறைந்த கதைகளை கூறுங்கள்.
15. பிள்ளைகள் உங்களிடம் கூற வருவதை பொறுமையுடன் இருந்து கேளுங்கள்.
16. விடுமுறை நாட்களில் உறவினர்களிடம் அழைத்துச் செல்லுங்கள்.

சிறகு முளைக்காத பிள்ளைச் சிட்டுக்களுக்கு பறக்க கற்றுக் கொடுப்பது உங்கள் கடமை என்பதை மறந்து விடாதீர்கள். பறக்க எத்தனிக்கும் போது சரியான பாதையை காட்டாவிட்டால் அவை திசை மாறி பறந்து விடும். பிறகு நீங்கள் திசை தேடி அலைந்தாலும் சிட்டுக்களை வாழும் கூடு சேர்ப்பது கடினமாகும். எனவே " ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் "' என்று வள்ளுவர் கூறியதற்கு இணங்க உங்கள் பிள்ளைகளால் உங்களிற்கு மதிப்பும் மரியாதையும் உயர வேண்டும் என்ற ஆசை நிச்சயம் இருக்கும் ஆகவே பிள்ளைகள் உயர்வதற்கு தூண்டுகோலாய் துணை புரிந்தால் நிச்சயம் உங்கள் ஆசையை நிறைவேற்றுவார்கள்.

பிள்ளைகளின் விருப்பங்களுக்கும், ஆற்றல்களுக்கும் மதிப்புக் கொடுத்து விரும்பிய துறையில் கற்க விடுங்கள். பிள்ளை விரும்பிய துறையில் தடம் மாறி போய் விடாது இருப்பதற்கு தேவையான போது அறிவுரைகள் கூறி தடம் பதிக்க உதவி செய்யுங்கள் இவற்றுக்கெல்லாம் மேலாக சிறுவயது முதலே நல்ல பழக்கவழக்கங்களை பின்பற்றச் செய்யுங்கள். எல்லோரையும் மதிக்கக்கற்றுக் கொடுங்கள், சுத்தமாக இருக்கவும், இனிய வார்த்தைகளைப்பேசவும் கற்றுக் கொடுத்துப் பாருங்கள் உங்கள் வீட்டில் வசந்த காற்று வீசும். இன்பம் நிறையும், துன்பங்கள் மறையும் சந்தோஷம் சங்கீதம் பாடும்.

*திருமதி **S.**ஆனந்தராஜன்*
*பகுதித்தலைவர்*
*ஆரம்பபிரிவு*
*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*

*" எல்லா ஆற்றல்களும் உங்களுக்குள் இருக்கிறது. உங்களால் எதையும் செய்ய முடியும் என்று நம்புங்கள்"*

*- சுவாமி விவேகானந்தர் -*

# மௌன வாசிப்பும் ஆரம்பப் பிரிவும்

“நூல் பல கல்” என்ற ஔவையாரின் அமுத வாக்கிற்கு இணங்க நாம் எமது அறிவைப் பெருக்குவதற்கு வாசிப்பு இன்றியமையாதது என்பது உண்மை.

இதனாலேயே “ வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்பார்கள்” நூல்களை வாசிப்பதனால் நமக்குக் கிடைக்கும் அறிவு என்பது அரிய செல்வமாகும். வேறு செல்வங்களை கள்வர்கள் களவாடிச் செல்வது சுலபம்.

ஆனால் வாசிப்பு மூலம் நாம் பெறும் அறிவை எவருமே கவர்ந்திட முடியாது இதனைப் பின்வரும் பாடல் அடி எமக்கு உணர்த்துகின்றது.

“ வெள்ளத்தால் அழியாது, வெந்தழழால்
வேகாது, வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும்
நிறைவின்றிக் குறைவுறாது
கள்வர்க்கோ பயமில்லை, காவலுக்கோ
மிக எளிது கல்வியெனும்
உள்ளத்தே பொருளிருக்கப் புறம்காகப்
பொருள்தேடி உழல்கின்றாரோ”

இக்கருத்தை மேலும் வலியுறுத்துமுகமாக ரஸ்கின் எனும் ஆங்கிலக் கவிஞர் “புத்தகங்களால் ஒருவர் பெறும் அறிவை, இன்பத்தை மற்றவர்கள் தட்டிப்பறித்துவிட முடியாது” என்கிறார். வாசிப்பின் மூலம் அறிவு மேம்பாடு அடைவதுடன், மேலதிக அறிவையும், புதிய தகவல்களையும் கிரகிக்கும் திறனையும் வளர்க்க முடிகிறது. நாம் நூல்களை வாசிக்கும்போது அவை எமக்கு மனநிறைவைத் தருவதாகவும், மகிழ்வைத் தருவதாகவும் அமைதல் வேண்டும்.

இன்றைய மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலும், கைத்தொலைபேசியிலும், கணனியிலும், கிரிக்கட் போன்றவற்றிலும் காலத்தைக் கழிக்கின்றனர். இதனால் அவர்களது கல்வித்தரம் குன்றுகிறது. மொழிவளம், எழுத்தாற்றல், கட்டுரை, கவிதைவரைதல், கிரகித்தல் திறன் என்பன வலுவிழந்து போகின்றது.

இன்று இணையம் எனும் தொலைத்தொடர்பானது மாணவர்களிடையே பெருகி தேடல், வாசித்தல், எழுதுதல், குறிப்புக்கள் எடுத்தல் என்பன நிறுத்தப்பட்டு இணையம் ஊடாக தகவல்களைப் பெறுகின்றனர். இதனால் இவர்கள் வாசிப்புப் பழக்கத்தை மறந்து விடுகின்றனர்.

எனவே தற்கால மாணவர்களுக்கு சிறுவயதுமுதல் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக எமது பாடசாலையிலும் ஆரம்பப் பிரிவில் மௌனவாசிப்பிற்காக

நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த மணி ஒலிக்க பத்து நிமிடம் தாம் விரும்பி வாசிப்பதற்கு தயாராக வைத்திருக்கும் நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் ஒன்றை மௌனமாக அந்நேரத்தில் வாசிப்பர். இது ஒரு சிறந்த நடைமுறையாக பேணப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் மாணவர்களிடம் ஆர்வத்துடன், வாசிப்புத் திறனும், பயனும் மேலோங்கிக் காணப்படுகின்றது. வாசிப்பின் பயன்கள் என்னவென்று நாம் நோக்கின் அது சொல்லால் வடிக்கமுடியாது. நாம் பூரணமனிதராக, மனிதத் தன்மை உடையவராக மாண்புடன் வாழ முடியும் என்பதனை உள்ளத்தில் பதித்து

''சீனி உள்ள இடத்தைத் தேடி வரும்
எறும்புபோல் நல்ல நல்ல நூல்களை நாடி
நாமும் செல்வோம்.''

*திருமதி தயாநிதி விக்னேஸ்*
*ஆரம்பக்கல்வி ஆசிரியர்*
*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி*

***சமூகத்தைக் கடந்து நாம் வளரவேண்டும்.***
***நியதிகளை உடைத்தெறிந்து அவற்றிற்கு***
***அப்பால் செல்ல வேண்டும்.***
***இயற்கையை வெல்வதற்காகவே***
***இயற்கைக்கு அடங்கி வாழ்கிறோம்.***
- *சுவாமி விவேகானந்தர்* -

# உணவு சாப்பிடும் முறை

- △ பழங்கள், காய்கறிகள், கீரைகள், தேங்காய், முளைகட்டிய தானியங்கள், முளைகட்டிய பயறு ஆகியவை உடலுக்கு ஏற்ற உணவுகள்.

- △ தினமும் காலை உணவை அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாளுக்குத் தேவையான முழு சக்தியையும் காலை உணவே அளிக்கிறது. காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.

- △ இரவு மிகக்குறைந்த அளவே சாப்பிட வேண்டும்.

- △ இரவு முடிந்தவரை இலகுவில் ஜீரணிக்கக் கூடிய உணவுகளை எடுத்துக்கொள்வது நல்லது. இதனால், சர்க்கரை அளவு கட்டுக்குள் இருக்கும்.

- △ சாப்பிடும் போது இடையே தண்ணீர் குடிக்கக் கூடாது. இதனால், வயிற்றில் சுரக்கும் ஜீரண அமிலம் (hcl acid) ஐதாக்கப்படுவதால், வீரியம் குறையும். செரிமானம் தாமதப்படும்.

- △ சாப்பிட்டதும் உணவு நன்றாக செரிக்க ரத்த ஓட்டம் நமது வயிற்றுப் பகுதிக்குத் செல்ல வேண்டும். கால்களைத் தொங்க விட்டுக் கொண்டு கதிரைகளில் இருந்து சாப்பிடுவதை தவிர்க்கவும். ஏனெனில் இரத்த ஓட்டம் கால்பகுதிக்கு சென்றுவிடும்.

- △ இயலும் என்றால், சம்மணம் போட்டு கீழே இருந்து சாப்பிடவும். இப்படி அமர்வதால் வயிற்றை மடித்து குனிந்து சாப்பிடுவோம். இது செரிமானத்திற்கு உதவி செய்யும்.

- △ இதே போல் சாப்பிட்டவுடன் குளிப்பதால் ரத்த ஓட்டம் கை, கால் என உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றுவிடும். இதனால், வயிற்றுப் பகுதிக்குச் செல்லும் ரத்த ஓட்டம் குறையும்.

- △ உணவு சரியாகச் செரிக்க நீண்ட நேரம் எடுக்கும். அல்லது சரியாக ஜீரணம் ஆகாது. எனவே, குளித்த பின் அரை மணி நேரம் கழித்துச் சாப்பிடுவது நல்லது. சாப்பிட்ட பின் குளிப்பது என்றால் இரண்டு மணிநேரம் கழித்துக் குளிக்கலாம்.

- △ சாப்பிட்ட உடனேயே நடக்கக் கூடாது. சாப்பிட்ட உடனேயே நடப்பதால் உணவு மண்டலத்தின் செயற்பாடுகளில் தடை ஏற்படும். சாப்பிட்டு சிறிது நேரத்தால் நடப்பதே நல்லது.

- △ இரவு உணவை தூங்க போவதற்கு 2 ,3 மணிநேரத்துக்கு முன் சாப்பிட வேண்டும். அதாவது சாப்பிட்ட உணவுகள் சரியாக செரிமானம் ஆன பிறகு தூங்குவது சிறந்தது.

- △ நினைவாற்றல் பெருக வல்லாரை கீரையைச் சாப்பிட்டு வரலாம்

**செல்வன் க.சிகாசன்**
**தரம் 4B**

# உலகப் பொது மறையாம் திருக்குறள்

கல்விக்கு கரையில்லை கற்பவர்கள் படிக்கவேண்டும் என்று ஆசைப்படுவார்கள் ஆனால் எல்லாம் படிப்பதற்கு வாழ்நாள் போதுமான அளவில் இல்லை. திருக்குறள் நூல் இல்லாத வீடில்லை என்று சொல்லும் அளவில் அதைப் படிக்கும் ஆர்வம் அனைவருக்கும் உள்ளது. தமிழ் கற்று அதன் பிறகு திருக்குறள் படிப்பதற்கு வாழ்நாள் போதாது என்று உணரப்பட்டதால் தமிழனாகப் பிறக்க ஆசைப்படுகிறேன் என்றார் காந்திமகான் உலகப் பொதுமறையான திருக்குறள் உலகில் அதிகூடிய மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்ட ஒரே ஒரு பொது நூல் என்ற பெருமையைக் கொண்டது.

அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது இதில் அறத்திற்கு 38, பொருளுக்கு 70, இன்பத்திற்கு 25 என 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துப் பத்துப் பாக்களாக 1330 குறள்களிலும் தம் கருத்துக்களை ஏற்றி இன்றைய உலகம் நல்லுலகாக மிளிர அன்றே அதிகாரம் தந்த திருவள்ளுவர் தமிழ்த் தாயின் பெருமைக்குரியவர் ஆவார். சமயங்கள் அனைத்தையும் கடந்த நூலாய் இன்பத்துப் பாலும் இணைந்த இன் நூலைப்போல் பிறிதொரு நூலை இவ்வுலகில் காண்பதரிது.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்
நான்கும் இழுக்கா இயன்றது அறம்

என்ற குறளிலே பொறாமை, பேராசை, கோபம், கடும் சொல் ஆகிய நான்கையும் கைவிட்டு வாழ்வதே தர்மவழி என்றும் தான் நெஞ்சறிவது பொய்யற்குப் பொய்தபின் தன் நெஞ்சே தன்னைச் சாரும் என்ற குறளில் குற்றம் புரிந்த உள்ளம் தன்னைத் தானே அறிந்துகொள்ளும் எனவும் ஒரு மனிதன் தான் எடுத்த பிறப்பில் எவ்வாறெல்லாம் வாழவேண்டும் எனவும் அழகாக மானிட உள்ளங்களை மனக்கண்முன் கொண்டுவருகின்றார் திருவள்ளுவர். அன்பில்லாதலன் அறம் வருத்தும் என்றும் மக்கற் பண்பில்லாதவனை மரம் என்றும் கல்வி இல்லாதவனை கண்ணில்லாதவன் என்றும், புதுமொழி படைத்தார் பொய்யாமொழிப் புலவர்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்றும் வலியுறுத்தும் பல திருக்குறள் பாக்கள் உலகில் நல்லவராய் வாழ வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

மேலும் இன்றைய அவசரமான உலகிலே அறிவியல் வளர்ந்து மனிதன் நிம்மதியின்றி தவித்துக்கொண்டிருக்கும்போது அன்பு, ஒழுக்கம், இனியவை கூறல், பொய் கூறாமை, வாய்மை, அடக்கம் என்பன மனித மனத்தைச் செம்மைப்படுத்தும் குறள்களாக உள்ளன. இவ்வாறு பல்வேறு குறள்களிலும் மனித வளத்தை வளப்படுத்தும் கருவியாக காணப்படும் இந்தத் தமிழ் மறை மத வேறுபாடின்றி மக்கள் எல்லோராலும் போற்றப்படுகின்ற இலக்கியம் ஆகும். இதனையே பாரதியார், வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்த வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என புகழ்ந்து பாடுகிறார். இதனிடையே மதுரைத் தமிழ் நாகனார் எல்லாப் பொருளும் இதன்பால் உள்ளது இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையாம் என புகழ்ந்து போற்றுகிறார். இவ்வாறு சிறப்பு வாய்ந்த இந்தப் பொது மறையின் அறக் கருத்துக்களைப் பின்பற்றி அதன்படி நாம் நடக்கவேண்டும்.

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற குறளுக்கு ஏற்ப மனித வாழ்விற்கு அவசியமான அனைத்து விடயங்களையும் கற்றறிந்து அதற்கேற்ப வாழ்வது தெய்வப்புலவர் திருவள்ளுவர் அவர்களுக்குப் பெருமை சேர்ப்பது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

*செல்வன் கு.குஹகரன்*
*தரம் - **4A***

---

# எனது ஆசிரியர்

எனது ஆசிரியரின் பெயர் திருமதி T.விக்னேஸ் அவர்கள். அவர் எனக்கு ஆசிரியராகவும் சிறந்த தாயாகவும் விளங்குகிறார். நாம் செய்யும் தவறுகளைப் பொருட்படுத்தாது மிகவும் அன்பாக எம்மை வழிநடத்துவார். எம்மை எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக மாற்றுவதற்கு மிகவும் கடினமாக உழைக்கின்றார். எனவே, நாம் பாடசாலைக் காலத்திலும் பாடசாலையில் இருந்து விலகும் காலத்திலும் ஆசிரியர்களை மதிக்கவேண்டும். தாயைப்போல் நேசிக்க வேண்டும். என் ஆசிரியரை நான் மதிப்பதுடன் எப்போதும் நேசிக்கின்றேன்.

*செல்வி ர.லேவிஷா*
*தரம் - **3B***

# சுவாமி விபுலானந்தர்

முத்தமிழ் வித்தகர் என்று அழைக்கப்படும் ''சுவாமி விபுலானந்தர்'' தமிழுக்கு பெருந் தொண்டாற்றியவர்களில் மிகவும் முக்கியமானவர். தமிழையே மூச்சென்று சுவாசித்தவர். இவர் ஆற்றிய தமிழ் பணிகளும் சமூக சேவைகளும் இவரை உயர் நிலைக்கு இட்டுச் சென்றது. இவர் ஒரு ஆசிரியராக, தமிழ் பண்டிதராக, விஞ்ஞான பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, மற்றும் மொழி பெயர்ப்பாளராக வாழ்ந்து தமிழுக்கும் சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்றினார். இவரது தந்தையின் பெயர் சாமித்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மை. இவர் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் காரைதீவு எனும் ஊரில் 1892ம் ஆண்டு 03ம் திகதி பிறந்தார். இவர் ஆரம்ப கல்வியை கல்முனை மெதடிஸ்த கல்லூரியில் கற்றார். மட்டக்களப்பு மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் 1947ம் ஆண்டு ஆடி மாதம் 10ம் திகதி உடல்நலக் குறைவால் உயிர் இழந்தார்.

*செல்வன் செ.ஜித்ரேஸ்*
*தரம். 4B*

# நான் பறவையானால்

சுதந்திரமாக சிறகடித்து பறக்கும் பறவைகளை காணும் போதெல்லாம் அவற்றை போலவே சிறகடித்து பறக்கும் ஆர்வம் எனக்குள்ளும் எழுவதுண்டு நான் ஒரு பறவை ஆனால் எல்லைகளற்ற வான்வெளியில் என் அகன்ற சிறகுகளை விரித்து மகிழ்ச்சியாகப் பறப்பேன்

கவலைகளை எல்லாம் மறந்து இயற்கையின் அழகுகளை எல்லாம் கண்டு மகிழ்வேன். வானுயர்ந்த மரங்களைக் கொண்ட காடுகளையும் பச்சைப் பசேலென்ற காடுகளையும் சலசலத்து ஓடும் ஆறுகளையும் தாண்டி உயரப் பறப்பேன். பறந்து விரிந்து சமுத்திரங்களின் மேல் வட்டமடித்து பறந்து தூய்மையான காற்றை சுவாசிப்பேன்.

மலைகளில் இருந்து விழும் நீர் வீழ்ச்சிகளை அதன் உச்சியில் அமர்ந்தவாறு இரசிப்பேன் வானிலிருந்து பொழியும் மழைத்துளிகளினுடாக உற்சாகமாய் பறந்து மழையில் நனைவேன். காடுகளில் கிடைக்கும் பழங்களையும், வயல்களில் மின்னும் நெல் மணிகளையும் கொத்தி உண்பேன்.

மலை அடிவாரங்களில் அமர்ந்து நான் இதுவரைக்காணாத இயற்கையின் அழகான அம்சங்களை கண்டு களிப்பேன். அதிகாலையில் துயிலெழுந்து இனிமையான குரலெழுப்பி மனிதர்களின் தூக்கம் களைவிப்பேன். காலை வேளைகளில், அவசர மாக பள்ளிக்கு ஓடாமல், சூரியக்கதிர்களினூடே சிறகுகளை விரித்துப்பறப்பேன்.

*செல்வன் பா.ரொமிரேஸ்*
*தரம். 4B*

# *பனைமரம் பேசுகிறேன்.......*



என்னை விரும்பி நடுபவர் இல்லை
என் நிழலை வேண்டி நாடுபவர் இல்லை
தென்னையைப்போல் - என்னைக் கட்டி வளர்ப்பவர் இல்லை
எனக்கு நீர் ஊற்றுபவர் இல்லை – ஒருபோதும்
உரம் இடுபவரும் இல்லை - ஆனாலும் நான்
மனித குலத்திற்கு என்னை அர்ப்பணிக்கின்றேன்
என் இரத்தத்தை இனிய பானமாகத் தருகின்றேன்
நோய் தீர்க்கும் அருமருந்தான பனங்கற்கண்டைத் தருகின்றேன்
என் ஓலைகளைத் தருகின்றேன், காய்களையும் தருகின்றேன்
நஞ்சற்ற என் கனியைத் தருகின்றேன்
என் கிழங்குகளைக்கூடத் தருகின்றேன் - இறுதியில்
என் உடலையும் முழுமையாகத் தருகின்றேன் - என்னை
அடிமுதல் நுனிவரை பயன்படுத்தும் மனித குலமே!
நான் பனைமரம் மட்டுமல்ல உங்களின் "பண"மரமும்தான்
உங்களுக்காகவே வளரும் என்னை ஒருபோதும் அழித்துவிடாதீர்
நானே உங்கள் கற்பகத்தரு..........!!

*செல்வன். ஸ்ரீ.கோஸீகன்*
*தரம் - 5B*

*அன்பின் மூலம் செய்யப்படும்*
*ஒவ்வொரு செயலும்*
*ஆனந்தத்தைக் கொண்டுவந்து*
*தந்தே தீரும்*
*- சுவாமி விவேகானந்தர் -*

# காவலர்

காக்கிச் சட்டை போட்டவர்
காவல் துறையில் உள்ளவர்
நாட்டை மதிக்கும் நல்லவர்
நம்மைக் காக்கும் வல்லவர்!



வீதி விபத்து நடந்திடாத
விதமாய் பாது காப்பவர்
மோதி விழுந்த போதிலும்
ஓடி வந்து உதவுவார்!

சாலை தன்னில் வாகனச்
சட்ட ஒழுங்கு விதிகளைக்
காலை மாலை இரவெல்லாம்
காக்கும் கடமைக்குரியவர்!

அவர்தம் ஆணை கேட்டுமே
அடக்க மாகப் பாதையில்
எவரும் செல்லும் போதினில்
எவர்க்கும் தொல்லை இல்லையே!

*செல்வன். ஞா.ரிசாந்*
*தரம் - 5A*

## கல்விக்கவிதை



நீரைப்போல அள்ள அள்ள குறையாத
பொக்கிசமே கல்வி !
அறிவு என்னும் பொக்கிசத்தை
திறக்க உதவும் ஒரே சாவி கல்வி !
எமது அறியாமையை அகற்றி
அறிவை புகட்டும்
அற்புத பொக்கிசம்தான் கல்வி !
தேசத்தின் மிகப் பெரிய
சொத்தே கல்வி !
எம்மவர்க்கு நற்பண்புகளை
உள்ளீரப்பதே கல்வி !
நூல்கள் பல புரட்டியதால்
வாழ்க்கையில் உயர்வு தந்திடுமே கல்வி !
கல்வி என்னும் செல்வம்
நம் வாழ்வின் சிகரம்
போல் வளரச் செய்யும் !
கல்வி கற்பது அருள்
அதைக்கொடுப்பது வரம் !
யார் துணையில்லாவிடினும்
கற்ற கல்வி கைவிடாது எம்மை !!!

*செல்வி .ஆ.ரேமிதா*
*தரம் - 2A*

## அம்மா



எப்போதும் உன் அன்பு எனக்கு

மட்டுமே சொந்தமாக வேண்டும்

உன் தாலாட்டில் நான் தூங்க வேண்டும்

உன் அரவணைப்பில் மடிசாய வேண்டும்

நான் இருக்கும்வரை – என்னோடு

நீ வேண்டும் என்தாயே.......

*செல்வி .கோ.லோஸ்மிதா*

*தரம்– 5B*

## மதிப்பெண்




புத்தகங்களைப் படித்தோம்....
மனப்பாடம் செய்தோம்......
வெள்ளைத் தாளில் ஒப்பித்தோம்....
ஒரு வார்த்தைகள் கூட மறக்காமல் கொட்டித் தீர்த்தோம்......
மறந்தாலும் நினைவுக்குக் கொண்டு வந்து எழுதினோம்.....
நல்ல மதிப்பெண்கள் வாங்கினோம்.....
இந்த மதிப்பெண்கள் யாருக்கு!
என் அறிவுக்கா? என் மனப்பாட சக்திக்கா?

*செல்வி. வி.விஹன்யா*
*தரம் -5B*

## ஆசான்



